[7th November 1966

நிலைமை ஏற்பட்டது. செட்டில்மெண்ட் செய்வதற்கு இப்பொழுது இருக்கக்கூடிய விதிமுறைகளுக்குத் தகுந்த முறையில் கால தாமதம் ஆகத்தான் செய்யும்.

திரு. ஸ்ரீ. கலியாணசுந்தரம்: இதற்கிடையில் இனாம்தார்கள் விவசாயிகளை வெளியேற்றுவதையும், மரம் போன்றவற்றை வெட்டு வதையும் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது.

கனம் திரு. வெ. ராமையா: எந்த எந்த இடங்களிலே அம்மாதிரி கஷ்டங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறதோ அங்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

* 411 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வானூர் தொகுதியில் பொம்மையார் பாளையம், குயிலா பாளையம், பிள்ளைச்சாவடி முதலான கிராமங்களில் உள்ள நிலங்கள் அனைத்தும் (சர்க்கார் புறம் போக்காக) புறம்போக்காக மாற்றப்பட்டது உண்மையா?

கனம் திரு. வெ. ராமையா: இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த குயிலா பாளையம், பொம்மைய பாளையம் கிராமங்களிலே உள்ள மயிலம் சிவசுப்பிரமணியர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை அனைத்தையும் புறம்போக்காக சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள். அங்கே முன்னால் பயிர் செய்து கொண்டிருந்தவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டார்கள். சர்க்கார் புறம்போக்காக வந்து விட்டன என்ற காரணத்தினால்தான் எத்தனை பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களுடைய விஸ்தீரணம் எவ்வளவு? இனிமேலாவது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: அப்படி நடவடிக்கைகள் எடுப் பதற்கு முன்னால் செட்டில்மெண்ட் என்குயரி நடக்க வேண்டியிருக் கிறது. என்குயரி நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது என்குயரிக்குப் பாதகமான எதையும் நான் சொல்வது சரியல்ல.

Devasthanam lands

*412 Q.—SRI K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any representation, dated 14th August 1964, has been made by the Mayuram tenants who have raised their houses in the Devasthanam lands in Municipal limits to repeal the City Tenants' Protection Act; and